முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**

## AA2 பரீட்சை – 2018 சனவரி

# (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

(Business management and strategy)

2018-01-21
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  - (1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  - (2) ***சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  - (3) ***விடைகள்*** *உங்களுக்குத் தரப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படுதல் வேண்டும்.*
  - (4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தை*** *அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.*

**1.1** குறித்ததொரு காலப்பகுதியில் நிறுவனமொன்றின் உள்ளீடுகளுக்கும் வெளியீடுகளுக்குமிடையிலான விகிதம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) வினைத்திறன் (Efficiency)
(2) பயனுறுதி (Effectiveness)
(3) உற்பத்தித்திறன் (Productivity)
(4) படைப்பாற்றல் (Creativity)

**1.2** பின்வருவனவற்றுள் முறைமைக் கோட்பாட்டிலுள்ள (Systems theory) முறைமை ஒன்றின் ஒரு கூறு எது?

(1) உள்ளீடுகள் (Inputs)
(2) சூழல்
(3) பின்னூட்டம் (Feedback)
(4) மேலுள்ள அனைத்தும்.

**1.3** பின்வருவனவற்றுள் யப்பானிய முகாமைத்துவப் பாணியுடன் தொடர்புடைய ஒரு நடைமுறை (Practice) எது?

(1) குறுங் கால வேலைவாய்ப்பு
(2) கூட்டுத் தீர்மானம் எடுத்தல்
(3) தனிநபர் பொறுப்பு
(4) தனிநபர் தீர்மானம் எடுத்தல்

**1.4** பின்வருவனவற்றுள் அதிகாரக் கையளிப்பின் ஒரு அனுகூலமாக **அமையாதது** எது?

(1) ஊழியர்களின் ஊக்கம்
(2) சிறந்த ஒருங்கிணைப்பு
(3) கீழ்மட்ட ஊழியர்கள் மீதான நம்பிக்கையின்மை
(4) பயனுறுதிமிக்க முகாமைத்துவம்

**1.5** பின்வருவனவற்றுள் கலாசார வலையின் (cultural web) ஒரு கூறாக **அமையாதது** எது?

(1) குறியீடுகள் (Symbols)
(2) நிறுவனக் கட்டமைப்பு (Organizational structure)
(3) கட்டுப்பாட்டு முறைமை (Control system)
(4) நிறுவனப் பணி (Organizational mission)

*வினா இல.**1.6** தொடக்கம் **1.10** வரையில் கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் கூறுக. உங்களது விடையினை (சரியானது / தவறானது) உங்களுக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி, அதன் எதிரே எழுதுக.*

**1.6** தலைமைத்துவத்தின் பண்புசார் கோட்பாட்டிற்கு (Trait Theory) இணங்க, அர்ப்பணிப்பு (Dedication) என்பது பயனுறுதிமிக்க தலைவர் ஒருவரின் பண்பாகும்.

**1.7** படிமுறை மாற்றம் (Step change) என்பது வெளிவாரிச் சூழலில் உள்ள குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு இணக்கமாவதற்கு (adopt) உதவும் வகையில் நிறுவனமொன்றை மீள வடிவமைப்பதற்கான முறைமைசார் முயற்சி (Systematic attempt) ஆகும்.

**1.8** மாற்றத்தின் தன்மை பற்றிய விளக்கமின்மையை, மாற்றத்திற்கான தடையின் ஓர் மூலமாக (source) அடையாளங்காண முடியும்.

**1.9** தலைவருக்கான சட்டரீதியான அதிகாரம் (Legitimate power) என்பது கம்பனி ஒன்றின் அதிகார வரிசையிலே நபர் ஒருவர் கொண்டிருக்கின்ற பதவிநிலையை அடிப்படையாகக் கொண்ட பதவிரீதியான அதிகாரம் (Positional power) எனவும் அழைக்கப்படுகிறது.

**1.10** ஒற்றுமை (Unity) என்பது நிறுவனமொன்றின் கலாசாரத்தில் ஓர் முக்கிய அம்சமாக விளங்குகிறது.

(ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

முகாமைத்துவம் என்பது மனிதர்கள் மற்றும் ஏனைய நிறுவன வளங்களுடன் சேர்ந்து பணிபுரிவதன் மூலம் நிறுவன இலக்குகளை அடைந்துகொள்ளும் செயன்முறை ஆகும்.

நிறுவனம் ஒன்றிற்கான முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை **விபரிக்குக**. (05 புள்ளிகள்)

## வினா 03

அதிகாரவியல் (Bureaucracy) என்பது சட்டம் மற்றும் எழுதப்பட்ட விதிகளால் அளிக்கப்பெற்ற அதிகாரத்தின் ஊடாக நபர் ஒருவரின் மீது அதிகாரத்தைச் செலுத்துகின்ற ஓர் உயரிய வழி ஆகும். அதிகாரவியலில் காணப்படுகின்ற விதிகள் மற்றும் நடைமுறைகள் காரணமாக ஊழியர்கள் ஓர் ஒழுங்குமுறையில் நடந்து கொள்கின்றனர்.

அதிகாரவியலின் ஐந்து (05) பண்பியல்புகளைக் (Characteristics) **கூறுக.** (05 புள்ளிகள்)

## வினா 04

தொடர்பாடல் என்பது நிறுவனங்களின் முக்கிய முகாமைத் தொழிற்பாடாக இருந்தபோதிலும், தொடர்பாடல் திறன்கள் இல்லாததன் காரணமாக அதிகளவான முகாமையாளர்களால் பயனுறுதிமிக்க தொடர்பாடலைப் பேண முடிவதில்லை.

பயனுறுதிமிக்க தொடர்பாடலைப் பேணுவதற்காக நிறுவனம் ஒன்றின் முகாமையாளருக்குத் தேவையான மூன்று (03) தொடர்பாடல் திறன்களை (Communication skills) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

கட்டுப்படுத்தல் என்பது ஒவ்வொரு முகாமையாளரினதும் ஓர் முக்கிய தொழிற்பாடாக இருக்கிறது. தந்திரோபாயக் கட்டுப்பாடு (Strategic control) மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு (Operational control) என்பன இரண்டு பிரதான கட்டுப்பாட்டு வகைகளாகும்.

தந்திரோபாயக் கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கிடையேயான ஐந்து (05) வேறுபாடுகளைக் **கூறுக.** (05 புள்ளிகள்)

## வினா 06

தலைமைத்துவம் என்பது முகாமையின் சகல மட்டங்களிலும் தேவைப்படுகின்ற ஒரு தொழிற்பாடு ஆகும். இது செயற்பாட்டினை அதிகரிப்பதற்கும் வியாபார நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் இடமளிக்கிறது.

நிறுவனம் ஒன்றிற்கு தலைமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான ஐந்து (05) காரணங்களைக் **கூறுக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறையை (rational decision making process) நடைமுறைப் படுத்துவது, முகாமையாளர்களுக்குப் பரிந்துரைக்கப்படுகின்ற போதிலும், அதிகளவான நேரங்களில் சில முகாமையாளர்கள் அவர்கள் முகங்கொடுக்கும் கஸ்டங்கள் காரணமாக இந்த அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதற்குத் தாங்களாகவே தயக்கம் காட்டுகின்றனர்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தலில் உள்ள நான்கு (04) தடைகளைக் (barriers) **கூறுக.** (04 புள்ளிகள்)

(b) புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறையுடன் தொடர்புடைய படிமுறைகளை (steps) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

ஊக்கப்படுத்தல் என்பது வியாபாரம் முன்னோக்கி நகர்வதற்கான ஓர் முக்கிய கூறாக இருக்கிறது. எனவே, ஊக்கப்படுத்தல் கோட்பாடுகளைக் கற்றுக்கொள்வது கம்பனிகள் மற்றும் தனிநபர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் முக்கியமானதாக இருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிறுவனமொன்றின் செயலாற்றுகைக்கும் (performance) ஊழியர் ஊக்கப்படுத்தலுக்குமிடையேயான (employee motivation) தொடர்பினை **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(b) "மாஸ்லோவின் தேவைப் படிநிலை கோட்பாட்டின் (Maslow's hierarchy of needs theory) கீழ்" காட்டப்பட்டுள்ள தேவைகள் (needs) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

சமூகப் பொறுப்புடைமை என்பது நவீன வியாபாரச் சூழலில் ஒரு பிரசித்திபெற்ற எண்ணக்கருவாக மாறிவருவதுடன் அதனை தனிநபர் மட்டத்தில் (தனிநபர் சமூகப் பொறுப்புடைமை) அல்லது நிறுவன மட்டத்தில் (நிறுவன சமூகப் பொறுப்புடைமை – CSR) ஆற்றக்கூடியதாகவும் இருக்கிறது. நிறுவனங்களால் வெவ்வேறுபட்ட தோற்றங்களில் பலதரப்பட்ட CSR நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நிறுவனமொன்றில் CSR நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நிறுவனத்தின் கலாசாரமும் தாக்கத்தைச் செலுத்துகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிறுவன சமூகப் பொறுப்புடமையின் (Corporate Social Responsibility - CSR) மூன்று (03) மட்டங்களை (levels) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றில் கலாசாரத்தின் முக்கியத்துவத்திற்கான காரணங்கள் நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

### வினா 10

**சுபுல் தளபாடக் கம்பனி திரு. உபுல்** அவர்களால் 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இக்கம்பனி உள்நாட்டுச் சந்தையில் மரத்தாலான வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. **சுபுல் தளபாடக் கம்பனி** ஒரு உள்நாட்டுக் கம்பனியாக இருப்பதால் அது அரசாங்கத்திடமிருந்து பல கொடைகளையும் மானியங்களையும் பெறுகிறது. இக்கம்பனி அதன் தொடக்கத்திலிருந்து **திரு. உபுல்** மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களால் முகாமை செய்யப்படுகிறது. அத்துடன் கம்பனி நன்கு அனுபவமிக்க அலுவலர்களால் இயக்கப்படுகிறது. செயற்பாடுகள், மனித வளங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் நிதி ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரதான தொழிற்பாடுகள் சிரேஷ்ட முகாமையாளர் ஒருவரால் கையாளப்படுகின்றன. பெரும்பாலான நேரங்களில் தீர்மானங்கள் கம்பனிக் குள்ளும் சந்தையிலும் நிலவுகின்ற சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அதற்கமைவாக (ad hoc) மேற்கொள்ளப்படுகின்றன. கம்பனியானது பலம்மிக்க வர்த்தக நாமத்துடன் வாடிக்கையாளர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருந்தபோதிலும் தற்போது இறக்குமதி செய்யப்படும் தளபாடங்கள் மற்றும் ஏனைய பதிலீட்டுப் பொருட்களினால் ஏற்படும் கடும் போட்டி காரணமாக கேள்வி வீழ்ச்சியடைகின்ற நிலைமை ஒன்றினை எதிர்கொள்கிறது. பாரம்பரிய மரத் தளபாடங்களை விடவும் உருக்கு மற்றும் பிளாத்திக் கினாலான தளபாடங்களையே மக்கள் விரும்புகின்றனர் என்பதை சந்தை ஆய்வு ஒன்றின் மூலம் **திரு. உபுல்** இனங்கண்டு கொண்டார்.

அண்மையில், CEO; **திரு. உபுல்** அவர்கள் வர்த்தக சம்மேளத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட வேலைப் பட்டறை ஒன்றில் கலந்துகொண்டிருந்தார். இவ்வேலைப்பட்டறை, முறையான தந்திரோபாய முகாமைத்துவச் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுத் தொழிற்றுறையை வலுவூட்டுதல் மீது பிரதான கவனத்தைச் செலுத்தியிருந்தது. இந்த வேலைப்பட்டறையின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு மற்றும் அனுபவங்களின் அடிப்படையில், கம்பனியை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக தொழிற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பை (functional organizational structure) அறிமுகப்படுத்துவதற்கும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான ஒரு தந்திரோபாயத் திட்டத்தை (Strategic plan) விருத்தி செய்வதற்கும் CEO தீர்மானித்திருந்தார். இந்நோக்கத்திற்காக கம்பனியால் ஒரு புதிய வியாபார ஆலோசகர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறார். அவரிடம் தற்போதைய நிறுவனக் கட்டமைப்பிலும் சூழலிலும் காணப்படுகின்ற சாதகமான (Positive) மற்றும் பாதகமான (Negative) அம்சங்களை அடையாளம் காண்பதற்காக, உள்ளக மற்றும் வெளிவாரி ரீதியான நிறுவனப் பகுப்பாய்வினை நடத்துவதற்குரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மாறுகின்ற சூழலில் (dynamic environment) **சுபுல் தளபாடக் கம்பனியினால்** எதிர்நோக்கப்படுகின்ற மூன்று (03) சவால்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **சுபுல் தளபாடக் கம்பனிக்காக,** தொழிற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பொன்று கொண்டிருக்கின்ற நான்கு (04) அனுகூலங்களையும் நான்கு (04) பிரதிகூலங்களையும் **கூறுக.** (08 புள்ளிகள்)

(c) SWOT பகுப்பாய்வினைப் பயன்படுத்தி, சூழலினால் **சுபுல் தளபாடக் கம்பனியின்** தொழிற்பாட்டிற்கு ஏற்படும் தாக்கத்தினை (impact) **மதிப்பிடுக.** (08 புள்ளிகள்)

(d) போட்டரின் பெறுமதிச் சங்கிலி மாதிரியின் (Porter's Value Chain model) மூன்று (03) முதன்மைச் செயற்பாடுகளைக் (Primary activities) **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |